

தமிழ்நாடு துணை முதலமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 07.12.2024 அன்று கொடி நாள் அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு, ரூ.50,000/க்கான காசோலையினை கொடிநாள் நிதி நன்கொடையாக சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, அவர்களிடம் நேற்று முன்தினம் முகாம் அலுவலகத்தில் வழங்கினார். இந்நிகழ்வின்போது, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்தயாநிதி மாறன், முன்னாள் ராணுவ வீரர்கள் நல வாரியத்தின் உதவி இயக்குநர் எட்வர்ட் ராஜ் மரியா ஜான் ஆகியோர் உடனிருந்தனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் தெற்கு ஒன்றியச் செயலாளராக புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள எஸ்.லூயிஸ், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி ஆகியோரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். ஒன்றியச் செயலாளர் ஜி. ரவிச்சந்திரன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் பிரேமா அல்போன்ஸ், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் எம். ஆர்.ராஜீவ் காந்தி உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் உடனுள்ளனர்.

### அரசியல் சாசனப் புத்தகத்தை கையில் ஏந்தி

# வயநாடு எம்.பி.யாக பிரியங்கா காந்தி பதவியேற்பு!

## அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் வாழ்த்து!

புதுடெல்லி, நவ.30-

மக்களவை வயநாடு எம்.பி.யாக பதவியேற்றுக் கொண்டார் பிரியங்கா காந்தி.

பிரியங்கா காந்திக்கு அனைத்துக்கட்சி எம்.பிக்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற பிரியங்கா காந்தி நாடாளுமன்ற உறுப்பினராக பதவி யேற்றார்.

வயநாடு தொகுதியில் அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி 4 லட்சத்து 10 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.



பிரியங்கா காந்தியை நூற்றுக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் மேளதாளத்துடன் நாடாளுமன்றத்திற்கு வழி அனுப்பி வைத்தனர். கேரளாவின் பாரம்பரிய புடவை அணிந்து நாடாளுமன்றம் சென்ற பிரியங்கா காந்தியை, காங்கிரஸ் எம்.பி.க்கள் வரவேற்றனர்.

அப்போது, தனது கைப்பேசி மூலம் பிரியங்கா காந்தியை, ராகுல்காந்தி புகைப்படம் எடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இதையடுத்து, வயநாடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக பிரியங்கா காந்தி பதவியேற்றார். அரசியல் சாசன புத்தகத்தை கையில் ஏந்தியவாறு அவர் பதவியேற்றுக் கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பிரியங்கா காந்திக்கு அனைத்துக் கட்சி எம்.பிக்களும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

### அதானி முறைகேடு, மணிப்பூர் வன்முறை குறித்து விவாதிக்க

# காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் 3வது நாளாக வலியுறுத்தல்!

## விவாதம் நடத்த மக்களவை சபாநாயகர் அனுமதி மறுப்பு - முடங்கியது நாடாளுமன்றம்!

புதுடெல்லி, நவ. 30-

அதானி ஊழல் விவகாரம் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கம் எழுப்பியதையடுத்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தொடர்ந்து மூன்றாவது நாளாக முடங்கியது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 26ஆம் தேதி தொடங்கியது. அதானி குழும முறைகேடு, மணிப்பூர் விவகாரம், சம்பல் துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து விவாதம் நடத்தக்கோரி காங்கிரஸ், தி.மு.க.உள்ளிட்ட இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் வலியுறுத்தி வருகின்றனர். மணிப்பூர் வன்முறை தொடர்பாக விவாதம் நடத்தக்கோரி தி.மு.க. சார்பில் மக்களவை செயலாளரிடம் நேற்றும் நோட்டீஸ் வழங்கப்பட்டது.

அதன்படி, மூன்றாவது நாளான நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு மக்களவை கூடியதும், அதானி முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்தக்கோரி, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அவையின் மைய பகுதிக்குச் சென்று முழக்கமிட்டனர்.

இதனால் மக்களவை பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை மீண்டும் கூடியதும் அதானி முறைகேடு குறித்து விவாதிக்க வலியுறுத்தி முழக்கமிட்டதால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதேபோன்று, மாநிலங்களவையிலும் அதானி முறைகேடு, மணிப்பூர் விவகாரம் எதிரொலித்தது. இந்த பிரச்சினை தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கங்களை எழுப்பினர். ஆனால் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்க மாநிலங்களவை தலைவர் அனுமதி மறுத்தார்.

இதையடுத்து, மாநிலங்களவை முதலில் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, காங்கிரஸ், தி.மு.க. திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து வக்ஃப் வாரிய நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் காலம் அடுத்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரின் கடைசி நாள் வரை நீட்டிக்கப்பட்டது. இதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதனால் அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் வரை வக்ஃப் வாரிய திருத்த மசோதா தாக்கல் செய்யப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

# தன் செயலால் தன்னை வடிவமைத்து வருகிறார் துணை முதல்வர்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் வாழ்த்து!

சென்னை, நவ. 30-

துணை முதல்வர் பிறந்த நாளையொட்டி பொன்குமார் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

48வது அகவை காணும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி வாழ்த்துகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்பேற்று, தான் மேற்கொண்ட பணிகள் சிறப்பாக அமைந்ததால் அதனை அங்கீகரிக்கும் வகையில் முதலமைச்சரால் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சாதித்த சாதனைகளை அங்கீகரித்து தற்போது துணை முதலமைச்சராக உயர்வு பெற்றுள்ளார்.

கட்சிப் பொறுப்பிலும், ஆட்சிப் பொறுப்பிலும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மிகவும் சிறப்பாக, சுறுசுறுப்பாக செயல்பட்டு வருவது நாடறியும். குறிப்பாக, ஒவ்வொரு நாளும் தன்னுடைய செயலால், நடவடிக்கைகளால் தன்னை நாள்தோறும் வடிவமைத்துக் கொண்டே வருகிறார். அவரது தேர்தல் பரப்புரையானாலும், எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு அவர் சொல்லும் பதில் உரையானாலும் எல்லோராலும் பாராட்டக்கூடிய அளவிற்கு அமைந்து வருகிறது. திராவிட முன்னேற்ற கழக வளர்ச்சிக்கும், திராவிட மாடல் ஆட்சியின் செயல் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பணி அபாரம்.



**முதல்வருக்கு உறுதுணையாக இராணுவ தளபதியாக செயல்படுகிறார்!**

தலைவர் கலைஞருடைய எண்ணத்தை ஈடு செய்யும் வகையில் அன்றைக்கு அயராது பணியாற்றி அவருடைய நன்மதிப்பை பெற்றவர் தான் இன்றைய முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள். அதனால் மக்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பையும், நம்பிக்கையையும் பெற்று இன்றைக்கு மகத்தான வெற்றியுடன் ஆட்சி பொறுப்பை ஏற்று பல்வேறு சாதனைகள் மூலம் வரலாறு படைத்து வருகிறார். அதேபோல இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவருடைய அரசின் திட்டங்களை, கொள்கைகளை மக்களிடத்தில் கொண்டு சேர்க்க இராணுவத் தளபதியாக நம்முடைய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார். அவருக்கு வாழ்த்துக்கள்.

ஒரு கட்சியின் தலைமைக்கு இலக்கணம் என்பது; கட்சியைக் கட்டுக்கோப்புடன் நடத்துவது, கொள்கைகளை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வது, அதில் வெற்றி காண்பது என்பது மட்டுமல்ல. அடுத்தத் தலைமையை அடையாளப்படுத்துவது மிக மிக முக்கியமாகும். தலைவர் கலைஞர் அவர்கள் தளபதியை அடையாளப்படுத்தாமல் போயிருந்தால் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருக்கும். எனவே ஒரு இயக்கத்திற்கு அடுத்தத் தலைமை மிக முக்கியம் என்பதால் அதற்கு பொருத்தமான ஒருவரை, துடிப்பான இளைஞரை இன்றைக்கே அடையாளப்படுத்துவது அவசியமாயிற்று. அந்த அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டவர் தான் உதயநிதி ஸ்டாலின் ஆவார். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அவை தாங்கி இருக்கிற கொள்கைக்கு தொடர் எதிரிகள் நீடித்து வருகிற நிலையில், அதனை சமாளிப்பதற்கும் அந்த இயக்கத்தை துடிப்போடு அடுத்த நிலைக்கு கொண்டு சேர்ப்பதற்கும் ஒரு தலைமை அவசியம். அதற்கு பொருத்தமானவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். எனவே அவருடைய பணிகள் தொடர விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி உள்ளார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்கி கொள்கிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! சுப.தமிழழகன் முன்னிலை!

# தஞ்சை வடக்கு மாவட்டக் கழக மாணவர் அணி சார்பில் நலஉதவிகள் !

## க.அன்பழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

தஞ்சாவூர், நவ. 30 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. ஆலோசனையின்பேரில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் குழந்தைகள் அச்சத்தை போக்கும் வகையில் குழந்தைகள் நலப்பிரிவில் உளவியல் ரீதியாக குழந்தைகள் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் உணரும் வகையில் விளையாட உள் விளையாட்டு உபகரணங்களை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில்குமார் தலைமையில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் முன்னிலையில், குடந்தை சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் குழந்தைகள் நல மருத்துவர் பிருந்தாவிடம் வழங்கி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் செல்வகுமார், தலைமை மருத்துவ அலுவலர் கமுரூல்ஜமான், நிலைய மருத்துவ அதிகாரி பிரபாகரன், குழந்தைகள் நலமருத்துவர் ராஜேஸ்வரன், கும்பகோணம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெ.சுதாகர், வர்த்தகர் அணி அமைப்பாளர், முருகன், நெசவாளர் அணி அமைப்பாளர் அனந்தராமன், செவிலிய கண்காணிப்பளர்கள் சுதா, சித்ரா, குழந்தைகள் நலப்பிரிவு செவிலியர்கள் நாகஜோதி, சாந்தி, சொர்ண முகி, அனிதா மற்றும் பயிற்சி செவிலியர்கள், மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ராஜேஸ், தேவராஜன், வினோத் தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் தீனா, சாமுவேல் இந்நிகழ்ச்சியில் கழக மாணவர் அணி சார்பில் 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உள்விளையாட்டரங்க பொருட்கள் சருக்கு மரம், ஆடுகுதிரை, ஆடும் யானை, எண் விளையாட்டு சாதனங்கள், உளவியல் ரீதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறும் சிறுவர், சிறுமியர் மகிழ்ச்சியாக தங்கள் பெற்றோருடன் மருத்துவமனையில் இருப்பதை மறந்து விளையாடி மகிழ்ந்தனர்.

பெற்றோர்கள் உள் விளையாட்டு அரங்கில் தமது குழந்தைகள் விளையாடுவதை கண்டு அவர்களுக்கு உள்ளநோய்களையும் மறந்து மகிழ்ச்சி அடைந்து சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் நன்றி தெரிவித்தனர்.

அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி துணை முதல்வர் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலுடன், துணை முதலமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி நகரச் செயலாளரும், நகரமன்ற தலைவருமான ஆர்.சுப்பராயலு தலைமையில் அனைத்து வார்டுகளிலும் கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது, அத்துடன் கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் ச.அ.பெருநற்கிள்ளி முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சுமார் 250க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு மழைக்காலத்தில் பயன்பெறும் வகையில் குடைகள் வழங்கப்பட்டதன. மேலும் 2 வது வார்டில் உள்ள அரசு தொடக்க பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு படிப்பிற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டது. இவ்விழாவில் நகர துணைச் செயலாளர்கள், நகரக் கழக வார்டுச் செயலாளர்கள், நகரமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



திருச்சி மணப்பாறையில் ஜனவரி 2025'இல் நடைபெறவிருக்கும் பாரத சாரண – சாரணியர் இயக்கத்தின் வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி நிகழ்வின் முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (29.11.2024) பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, அப்துல் சமது, மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், மாவட்ட முதன்மை ஆணையர் அறிவொளி சேர்மன் அமிர்தவள்ளி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.